**(Under Section 173 BNSS)***

# FIRST INFORMATION REPORT

## முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~ 29.11.2024 C

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8082389

1. District : மாவட்டம் தூத்துக்குடி PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 07/2024 Date: நாள் 29.11.2024

2. (i) Act சட்டம்: **PC Act, 1988 as Amended in 2018** Sections பிரிவுகள்: **7**

   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : --

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் On 28.11.2024 Before 15.15 hrs Date from : நாள் முதல் Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **29.11.2024** Time : நேரம் **10.30 hrs**

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **29.11.2024** Time : நேரம் 10.45 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக **Written**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் **Thoothkudi Keelur Sub Registrar Office Thoothukudi, about 10 Kms NorthEast**

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **Tr.R.Ragupathi Raja** (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **I.Rajagopal**

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் **Indian** (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் **Special Thasildar (Land Acquisition)** (g) Address : முகவரி **High Ways Project-2 Unit-1, Collectorate, Thoothukudi.**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   **(1.) Tr.A.Arocklaraj, aged 54/2024, S/o Tr.L.Antony Pitchai, Assistant, Perunkulam SRO office, i/c Sub-Registrar, Thoothukudi Keelur Sub-Registry (Deputation), Thoothukudi and 3 others.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் இல்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

----

10. Total value of properties stolen / involved : ----
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: ----
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

-- Separate Sheet Enclosed --

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed J.Anitha .......... Rank Inspr.of Police.. to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

29/11/24 29-11-2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

திரு.S. Peter Paul Durai
Deputy Superintendent of Police
Vigilance And Anti Corruption
Thoothukkudi District
Thoothukkudi

15. Date & Time of despatch to the court: 29.11.2024 at 12.00 hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name / பெயர்:
Rank: நிலை No. எண்

GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p 2

**தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 07/2024, பிரிவு 7 of PC Act, 1988 as Amended in 2018 – ன் தொடர்ச்சி.**

**பணிந்தனுப்பப்படுகிறது :-**

| | |
|---|---|
| 1. Tr.A.Arockiaraj, aged 54/2024,<br>S/o Tr.L.Antony Pitchai,<br>Assistant,<br>Perunkulam SRO office,<br>i/c Sub Registrar,<br>Thoothukudi Keelur Sub-Registry (Deputation), Thoothukudi.<br><br>2. Tr.S.Muthumani, 59/2024,<br>S/o Tr.Subbaiah,<br>Office Assistant,<br>O/o the Keelur Sub-Registry,<br>Thoothukudi.<br><br>**Private Individuals :**<br><br>3. Tr.M.Mariappan, aged 48/2024,<br>S/o Tr.E.Madasamy,<br>Document Writer,<br>Mariappan Document Writing Office,<br>No.5/93A, Iyyappan Nagar,<br>3rd Street, Polpettai West,<br>Thoothukudi-2.<br><br>4. Tr.G.Joseph Selvaraj, aged 45/2024,<br>S/o Tr.S.Gnana Santhosam<br>(Working at Gomathi Document Writer Office),<br>No : 30A, 6th Street,<br>Anna Nagar, Thoothukudi. | தூத்துக்குடி மாவட்டம் ஒருங்கிணைந்த பத்திரப் பதிவுத் துறை அலுவலக கட்டிடத்தின் தரைதளத்தில் அமைந்துள்ள தூத்துக்குடி கீழூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் சார்பதிவாளர் மற்றும் அவருக்கு கீழ் பணிபுரியும் அலுவலக பணியாளர்கள் பத்திரம் பதிவு செய்ய வரும் பொதுமக்களிடம் பத்திரம் பதிவதற்காக ஆவண எழுத்தர்கள் மூலமாக லஞ்சமாக பணம் பெற்று வருவதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் 28.11.2024 ஆம் தேதி மதியம் 14.20 மணி முதல் 15.15 மணி வரை துணை ஆய்வுக் குழு அலுவலர் நிலையில் திரு.ரா.ரகுபதிராஜா தனி வட்டாட்சியர் (நில எடுப்பு) நெடுஞ்சாலைகள் திட்டம்-2 அலகு-1, |

மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம் அவர்களுடன் தூத்துக்குடி கீழூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் நடத்திய திடீர் சோதனையின் அடிப்படையில் துணை ஆய்வுக்குழு அலுவலர் நிலையில் திரு.ரா.ரகுபதிராஜா அவர்கள் கொடுத்த புகார் மனுவை 29.11.2024-ம் தேதி நான் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலக பணியில் இருந்தபோது காலை 10.30 மணிக்கு பெற்று தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 07/2024, பிரிவு 7 of PC Act 1988 as Amended in 2018–ன் படி மார்ஜினில் கண்ட எதிரிகளின் மீது வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர், ரா.ரகுபதிராஜா, தனி வட்டாட்சியர் (நில எடுப்பு), நெடுஞ்சாலைகள்

திட்டம்-2 அலகு-1, துணை ஆய்வு குழு அலுவலா் நிலையில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம். பெறுநர் காவல் துணைக் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி. அய்யா, பொருள் : தூத்துக்குடி கீழூர் சார்பதிவாளர் அலுவலக திடீர் தணிக்கை செயல்முறைகள் - சட்ட மேல் நடவடிக்கை எடுக்கக் கோருவது தொடர்பாக. ****** தூத்துக்குடி மவாட்டம் ஒருங்கினைந்த பத்திரப்பதிவு அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள தூத்துக்குடி கீழூர் சார்பதிவாளர் அவலகத்தில் சார்பதிவாளர் மற்றும் அலுவலக பணியாளர்கள் பத்திரப்பதிவு செய்யவரும் பொதுமக்களிடம் பத்திரம் பதிவு செய்வதற்கு ஆவண எழுத்தர்கள் மூலமாக லஞ்சம் வாங்குவதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் தூத்துக்குடி கீழூர் சார்பதிவக அலுவலகத்தை எனது தலைமையில் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் துணை கண்காணிப்பாளர், பெண் காவல் ஆய்வாளர் திருமதி.அனிதா மற்றும் போலீஸ் பார்ட்டியுடன் கிளம்பி 14.20 மணிக்கு தூத்துக்குடி புதிய பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த பத்திரப்பதிவுத்துறை கட்டிட வளாகத்திற்கு அருகே சென்று 15.15 மணிவரை தூத்துக்குடி கீழூர் சார்பதிவாளர் அலுவலக நடவடிக்கைகளை இரகசியமாக கண்காணித்ததில் கிடைத்த ரகசிய தகவலின்படி தூத்துக்குடி கீழூர் சார்பதிவாளர் (பொ) திரு.ஆரோக்கியராஜ் பத்திர எழுத்தர்கள் மூலம் லஞ்சமாக பணம் பெற்று வருவதற்கான முகாந்திரம் தெரிய வந்ததால் 28.11.2024 ம் தேதி மாலை சுமார் 15.15 மணிக்கு தூத்துக்குடி கீழூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் சென்று திடீர் தணிக்கை செய்ததில் மேற்படி சார்பதிவாளர் அலுவலக கணினி அறையில் அமர்ந்திருந்த பின்னர் பெயர் விபரம் கேட்டு தெரிந்த ஆவண எழுத்தர் திரு.மாரியப்பன், த/பெ.மாடசாமி என்பவரிடம் பேண்டு பாக்கெட்டில் இரண்டு கத்தையாக வைத்திருந்த பணம் ரூ.20,500/- மற்றும் சட்டைப்பையில் வைத்திருந்த பணம் ரூ.5.500/- ற்கு உரிய விளக்கம் அளிக்க இயலாமல் சந்தேகத்திற்கு இடமான வகையில் வைத்திருந்ததால் மொத்த பணம் ரூ.26,000/-மும், அந்த அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.முத்துமணி என்பவரிடம் சந்தேகத்திற்கு இடமான வகையில் பணம் கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்யாமல் வைத்திருந்த பணம் ரூ.1,300/-ம், மேற்படி அலுவலக பதிவு வைப்பறையின் வாயிலில் நின்றுகொண்டிருந்த பின்னர் பெயர்விபரம் கேட்டு

தெரிந்த சார்பதிவாளர் அலுவலகத்தில் பதியப்படும் பத்திரங்களில் சாட்சிக் கையொப்பம் போடுவதை வழக்கமாக கொண்ட திரு.ஜோசப் செல்வராஜ், த/பெ.ஞானசந்தோஷம் என்பவரை சோதனை செய்தபோது அவரது பேண்ட் பாக்கெட்டில் சந்தேகத்திற்கு இடமான வகையில் வைத்திருந்த பணம் ரூ.3,000/- மும், மேற்படி திரு.ஜோசப் செல்வராஜ்தான் பத்திர எழுத்தர்களிடம் இருந்து லஞ்சப்பணத்தை பெற்று சார்பதிவாளருக்கு கொடுப்பதாக கிடைத்த தகவலின்பேரில் அவரிடம் விசாரித்தபோது அவர் ஏற்கனவே வசூல் செய்த பணத்தை அவர் வேலை செய்யும் கோமதி பத்திரம் எழுதும் அலுவலகத்தில் பத்திர எழுத்தர் கோமதி அவர்களிடம் ஒரு துணிப்பையில் கொடுத்து வைத்துள்ளதாக தெரிவித்து அவராகவே அந்தப் பணத்தை கோமதி அவர்களிடமிருந்து வாங்கிக் கொண்டு வந்து என் முன்னிலையில் ஆஜர் செய்ததை சோதனை செய்ய அதில் திரு.ஜோசப் செல்வராஜ் வசூல் செய்த பணம் மற்றும் பத்திர எழுத்தர் திருமதி.கோமதி அவர்கள் திரு.சொர்ணகுமார் வகையறாக்கள் பத்திரம் பதிவு செய்வதற்காக கொடுத்து வைத்திருந்த பணம் ரூ.2,50,000/- மும் சேர்த்து மொத்தம் ரூ.3,80,000/- இருந்தது. இந்த பணம் குறித்து பத்திர எழுத்தர் திருமதி.கோமதி அவர்களிடம் கேட்க அவர் மேற்படி பணம் ரூ.3,80,000/-மும் சொர்ணகுமார் வகையறாவிடம் பத்திரத்தை தட்டச்சு செய்வதற்காக வாங்கி வைத்துள்ளதாக தெரிவித்தார். இதுகுறித்து திரு.சொர்ணகுமார் மற்றும் அவருடைய தாயார் திருமதி.தனலட்சுமி ஆகியோரிடம் விசாரிக்க அவர்கள் ரூ.2,50,000/- மட்டும் நகை அடமானம் வைத்து பத்திர பதிவுவிற்கு பத்திரம் வாங்க கட்டணம் செலுத்த கொடுத்ததாக தெரிவித்தார். பத்திர எழுத்தர் கோமதி என்பவர் மேற்படி பணம் குறித்து தெரிவித்த விளக்கம் திரு.ஜோசப் செல்வராஜ், திரு.சொர்ணகுமார் மற்றும் திருமதி.தனலட்சுமி ஆகியோர் தெரிவித்த விபரங்களுக்கு மாறாகவும் சந்தேகத்திற்கு இடமான வகையிலும் பத்திர எழுத்தர் திருமதி.கோமதி என்பவரிடம் வேலை செய்யும் திரு.ஜேசப் செல்வராஜே லஞ்சமாக சார்பதிவாளருக்கு கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் என்று தெரியவந்ததால் திரு.சொர்ணகுமார் வகையறாக்கள் கொடுத்த பணம் ரூ.2,50,000/- அவர்களிடம் கொடுத்துவிட்டு மீதபணம் ரூ.1,30,000/-ம், அந்தப் பணம் வைக்கப்பட்டிருந்த தங்கமயில் என்று அச்சிடப்பட்ட மஞ்சள் நிற துணிப்பையும், ஆக மொத்தம் பணம் ரூ.1,60,300/- நேற்று 28.11.2024-ம் தேதி 15.15 மணிமுதல்

20.00 மணிவரை தயார் செய்யப்பட்ட செயல்முறைகள் மூலம் கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்படி சோதனையின்போது கீழூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் இருந்த அனைவரிடமும் எனது முன்னிலையில் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டது. மேலும், மேற்படி சோதனையின்போது அலுவலகத்தின் தனி நபர் பண இருப்பு பதிவேடு-2024 மற்றும் வருகை பதிவேடு - 2024 ஆகியவையும் கைப்பற்றப்பட்டது. மேற்படி கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,60,300/- மற்றும் துணிப்பை மற்றும் செயல்முறையில் கைப்பற்றப்பட்ட ஆவணங்களை தங்களிடம் ஒப்படைத்து தூத்துக்குடி கீழூர் சார்பதிவாளர் (பொறுப்பு) திரு.ஆரோக்கியராஜ் மற்றும் அவருக்கு உடந்தையாக இருந்த அலுவலக உதவியாளர் திரு.முத்துமணி, பத்திர எழுத்தர் திரு.மாரியப்பன் மற்றும் கோமதி பத்திர எழுத்தர் அலுவலக பணியாளர் திரு.ஜோசப் செல்வராஜ் ஆகியோர் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். Sd/- 29.11.2024, திரு.R.ரகுபதிராஜா, தனி வட்டாட்சியர் (நில எடுப்பு), நெடுஞ்சாலைகள் திட்டம்-2 அலகு-1, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம். Sir, Received the complaint on today (29.11.2024) at 10.45 hrs and registering the complaint as Thoothukudi V&AC Cr.No.07/2024, U/s 7 of PC Act, 1988 as Amended in 2018. Sd/- 29.11.2024, S.Peter Paul Durai, Dy. Supdt. of Police, V&AC, Thoothukudi Detachment. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, திரு.R.ரகுபதிராஜா அவர்களின் அசல் புகார் மனு மற்றும் தூத்துக்குடி மாவட்ட ஒருங்கிணைந்த பத்திரப்பதிவுத்துறை அலுவலக கட்டிடத்தில் அமைந்துள்ள தூத்துக்குடி கீழூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து தயார் செய்த செயல்முறைகள் ஆகியவற்றை இணைத்து மேன்மைமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்ற நடுவர், தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பியும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை வழக்கு விசாரணைக்காக திருமதி.J.அனிதா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி பிரிவு அவர்களிடம் ஒப்படைக்கிறேன்.

29.11.2024

**Deputy Superintendent of Police**
**Vigilance And Anti Corruption**
**Thoothukkudi District**
**Thoothukkudi**